## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

# வடகிழக்குப் பருவ மழையை சமாளிக்க ஆலோசனை!

## அரசுத் துறை அலுவலர்களுடன் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நடத்தினார்!

திருவள்ளூர், அக். 08

திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை–2024 முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது . இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆலோசனை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் தெரிவிக்கையில், திருவள்ளூர் மாவட்டம் இயற்கை பேரிடர் இருந்தாலும் சரி, செயற்கை பேரிடர் இருந்தாலும் சரி சிறப்பாக பேரிடர் பணியினை அனைத்து துறை அலுவலர்களும் சிறப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா காலங்கள், பேரிடர் காலமாக இருந்தாலும் மிகவும் சிறப்புடன் பேரிடரை கையாண்டு மக்களை பாதுகாத்தவர் இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு முதலமைச்சர் தான்.

அதன் அடிப்படையில் துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவமழையின் போது வெள்ள பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்வது குறித்து அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி அறிவுரை வழங்கினார்கள்.

வருமுன் காப்போம் என்ற அடிப்படையில் பேரிடரை அனைத்து துறை அலுவலர்களும் கடந்த காலங்களில் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட அனுபவங்களை பாடமாக எடுத்துக் கொண்டு பேரிடர் பணி மேற்கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் நம் மாவட்டம் பெரும் வெள்ள பாதிப்புக்குள்ளானது. அவ்வாறு ஏற்பட்ட வெள்ள பாதிப்பினால் ஏற்பட்ட இயற்கை பேரிடரை தமிழ்நாடு முதலமைச்சர் நேரடியாக களம் மேற்கொண்டு உடனடியாக வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து நீர் வெளியேற்றும் பணியினை துரிதப்படுத்தி ஒரு வார காலத்திற்குள் வெள்ளநீர் வடியப்பட்டு இயல்பு நிலைக்கு கொண்டு வந்தவர்.

அதைப்போல் கடந்த காலங்களில் வடகிழக்கு பருவமழையின் போது வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை பொறுப்பு அமைச்சரான வேளாண்மை துறை அமைச்சர், வணிகவரி பத்திரத் துறை அமைச்சர் ஆகியோர் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து ஒரு வாரத்திற்குள் இயல்பு நிலையை கொண்டு வந்தார்கள்.

அதேபோல் வருகின்ற வடகிழக்கு பருவமழை ஒரு வாரத்திற்க்குள் தொடங்க இருப்பதால் உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்து துறை அலுவலர்களும் மழைக்கால் வடிகால் பணி, மின் வயர் கேபிள், ஊராட்சிப் பகுதிகளில் உள்ள வடிகால் பணி, தூர் வாருதல், போன்ற பல்வேறு பணிகள், மற்றும் ஏரிகளில் உள்ள ஆகாயத்தாமரைகள் அகற்றும் பணி, குடிநீர் மோட்டார் பம்ப்செட்டுகள், வெள்ள பாதிப்பு பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து பொதுமக்களை மீட்க படகுகளை தயார் நிலையில் வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆவின் மூலம் பால் பாக்கெட், பிஸ்கட் , பிரட் போன்றவை வழங்கிடுவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வெள்ளத்தினால் சாலையில் விழும் மரங்களை அகற்றுவதற்கு கூடுதலாக பணியாளர்கள் நியமித்து பணி மேற்கொள்ள வேண்டும். மேலும் மரம் வெட்டுவதற்கான தேவைப்படும் உபகரணங்களை அதிகமாகவும் வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும். வெள்ளை சூழ்ந்துள்ள தாழ்வான பகுதிகளில் பொதுமக்களை மீட்கும் பொழுது செல்போன் மற்றும் லேண்ட்லைன் தடை படும் பொழுது வாக்கி டாக்கி போன்ற வயர்லெஸ் கருவிகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

மின்சார வாரியம் தாழ்வான பகுதிகளில் உள்ள மின்வயர்களை மற்றும் மின் பெட்டிகளை உயரமான இடத்திற்கு மாற்றி அமைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மின் இணைப்பு துண்டிக்கப்பட்டாலும் . பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் மாவட்ட நிர்வாகம் பேட்டரி மூலம் லைட் அமைத்து தர வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையிலான ஒரு பேரிடர் மீட்புக் குழு அமைத்து செயல்பட வேண்டும். அந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலே இருந்து பேரிடர் நிலவரங்களை கண்காணிக்க வேண்டும்.

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் வாட்ஸ் அப் குழு அமைத்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து வரும் தகவல்களை உள்வாங்கி பணிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், பேரிடர் காலங்களின் போது அனுபவம் வாய்ந்த உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் பொதுமக்களே மீட்பதற்கான பணிகளில் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

மேலும், தொலைபேசி மற்றும் சமூக வலைதளங்களில் வரும் பேரிடர் தொடர்பான செய்திகளை உடனடியாக கள ஆய்வு மேற்கொண்டு பணிகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கண்காணிக்க வேண்டும் என துணை முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை தொடர்பான ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தினார்கள்.

அதேபோல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எந்தெந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் போது மீட்பதற்கு பயன்படும் பொருட்களின் கையிருப்புகள் உள்ளது குறித்து திட்ட அறிக்கையின்படி தெரிவித்தார்கள். பேரிடர் காலங்களில் ஒட்டுமொத்த தகவல்களை பெறுவதற்கான கட்டுப்பாட்டு அறையினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

இதனை ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் கட்டுப்பாட்டு அறையினை உருவாக்கி சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் கள ஆய்வு மேற்கொண்டு சிறப்பான முறையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் இருந்து வரும் தகவல்களை உள்வாங்கி அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஆரணி மற்றும் கொசைஸ்த்தலை ஆற்றில் உள்ள நீர் நிலைகளில் உள்ள வடிகால் கால்வாய்களை சீரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ள வேண்டும். எந்தெந்த பகுதிகளில் வெள்ள பாதிப்புகள் அதிகமாக உள்ள இடங்களை கண்டறிந்து அந்த இடங்களை ஆய்வு மேற்கொண்டு எவ்வாறு அப்புறப்படுத்த வேண்டும் என்பதை திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வெள்ள பாதிப்பு அடையும் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கொண்டு வந்து அவைகளுக்கு தேவையான உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சுகாதார ஊழியர்கள் ஆம்புலன்ஸ் மருந்து மற்றும் தடுப்பூசிகள் தயார் நிலையில் வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் . மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் தங்களது அலைபேசி எண் எப்பொழுதும் ஆன் வைத்து பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வெள்ளப் பேரிடரை மீட்க இருக்கிற என்று மக்களுக்கு தெரிய வந்தால் அவர்கள் நிம்மதியாக பயமில்லாமல் இருப்பார்கள். ஆகவே நாம் அனைவரும் ஒன்றிணைந்து பேரிடரை சமாளிக்க தயார் நிலையில் இருப்போம், பேரிடரை வென்று காட்டுவோம் என சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

முன்னதாக தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினர்கள் பல்வேறு பணிகளில் மீட்பு பணிகளுக்கு உபயோகப்படும் கருவிகள் குறித்து அமைச்சர் சா.மு.நாசர் எடுத்துரைத்தார்.

பின்னர் திருத்தணி தீ விபத்தில் உயிரிழந்த குடும்பத்தின் வாரிசுதாரான பார்வதி அவர்களிடம் ரூ.3 இலட்சத்திற்கான காசோலையும், சுபாஷினிக்கு ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையும், கோரமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி அன்று அமைச்சர் சா.மு.நாசரிடம் பரிமளா தையல் இயந்திரம் கேட்டார். அவர்களுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்பிலான மோட்டார் பொருத்திய தையல் இயந்திரத்தினை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். த.பிரபுசங்கர், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், திருத்தணி எஸ்.சந்திரன், டி.ஜெ.கோவிந்தராசன், துரை சந்திரசேகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்ரீநிவாச பெருமாள், காவல் துணை கண்காணிப்பாளர்கள் ஐமன் ஜமால், கே. பாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வை.ஜெயக்குமார், பொன்னேரி சார் ஆட்சியர் வாகே சங்கத் பல்வந்த, ஆவடி மாநகராட்சி துணை ஆணையர் சங்கரன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் .ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணை யாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயாராணி, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், துணை ஆணையாளர்கள் எம்.பிருதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), திரு.எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்), தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் மற்றும் மாநகர நல அலுவலர், மண்டல அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், தினையாம்பூண்டி ஊராட்சியில் தாட்கோ மூலமாக கூட்டுறவு பால் உற்பத்தி நிலையம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலமாக ரூபாய் 74 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழு கட்டிடத்தை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் – உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் திறந்து வைத்தார். இதில் ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா. நாகன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் எஸ். சசிகுமார், துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், மாவட்ட கவுன்சிலர் பத்மா பாபு, ஊராட்சி மன்ற தலைவர் சரஸ்வதி பெருமாள், அவைத்தலைவர் சுப்பராயன், கவுன்சிலர் அண்ணாதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் தனஞ்செழியன், தாட்கோ மேலாளர் ராஜ சுதா , கூட்டுறவு பால் உற்பத்தி துணை பதிவாளர் சித்ரா, சார்பதிவாளர் வெங்கடேசன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் – எழும்பூர் வடக்குப் பகுதி 78 (அ) வட்ட கழக முன்னாள் செயலாளர் ஆர்.புருசோத்தமனின் மாமாவும் எழும்பூர் பகுதி முன்னாள் மாணவர் அணி துணை அமைப்பாளர் எல்.நரேஷ்குமாரின் தந்தையும் கழக முன்னோடியுமான மறைந்த சி.பி.லட்சுமிபதி அவர்களின் திருவுருவப்படத்தை எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். இ.பரந்தாமன் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் எழும்பூர் தெற்கு பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.


